# பத்திரிக்கை செய்தி

திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமூதாயத்தில் மற்றும் பணிபுரியும் இடத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் மூலம் திருத்தணி மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் செயல்படும் பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பெண்கள் பணிபுரிய தகுதியான பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் திருவள்ளூர் மாவட்ட இணையதள முகவரி https://tiruvallur.nic.in ல் பணியிடம் மற்றும் தகுதிகள் குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண் இணையதளமுகவரியில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கீழ்கண்ட முகவரியில் 18.08.2025–ற்குள் விண்ணப்பங்களை சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பதவி பெயர் | எண்ணிக்கை | | தகுதி விவரம் |
|---|---|---|---|---|
| | | திருத்தணி | திருவள்ளூர் | |
| 1. | மூத்த ஆலோசகர் (Senior Counsellor) Rs.22,000/–Per month | 1 | - | • சட்டம் (Master in Law) / சமூகப்பணி (Master in Social Work) / சமூகவியல் (Sociology) / சமூக அறிவியல் (Social Science) / உளவியல் (Psycology) போன்றவற்றில் முதுகலைப் பட்டம் (Master Degree) போன்ற கல்வி தகுதியுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் அரசு அல்லது அரசு சாரா நிர்வாக அமைப்பில் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர்கள் மற்றும் அதே அமைப்பில் அல்லது அதற்கு வெளியே குறைந்தபட்சம் 1 வருட ஆலோசனை வழங்கிய அனுபவம் தேவை.<br>• மாத சம்பளம் ரூ.22,000/–<br>• வயது வரம்பு 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>• பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.<br>• 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.<br>• திருவள்ளூர் மாவட்டத்தினை சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வழக்கு பணியாளர் (Case Worker) Rs.18,000/- Per month/ Per Head | 6 | 3 | • சட்டம் (Master in Law) / சமூகப்பணி (Master in Social Work) / சமூகவியல் (Sociology) / சமூக அறிவியல் (Social Science) / உளவியல் (Psycology) போன்றவற்றில் முதுகலைப் பட்டம் (Master Degree) போன்ற கல்வி தகுதியுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் அரசு அல்லது அரசு சாரா நிர்வாக அமைப்பில் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர்கள் மற்றும் அதே அமைப்பில் அல்லது அதற்கு வெளியே குறைந்தபட்சம் 1 வருட ஆலோசனை வழங்கிய அனுபவம் தேவை.<br>• மாத சம்பளம் ரூ.18,000/-<br>• வயது வரம்பு 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>• பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.<br>• 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் (Shift) பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.<br>• திருவள்ளூர் மாவட்டத்தினை சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். |
| 4 | பல்நோக்கு உதவியாளர் (Multipurpose Worker) Rs.10,000/- Per Head/ Per month | 1 | 1 | • எழுத படிக்க மற்றும் சமைக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>• மாத சம்பளம் ரூ.10,000/-<br>• வயது வரம்பு 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>• பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.<br>• 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் (Shift) பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.<br>• திருவள்ளூர் மாவட்டத்தினை சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். |

<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

மாவட்ட சமூக நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் 2வது தளம்,
திருவள்ளூர் மாவட்டம்-602001.
தொலைபேசி எண்.044-29896049